අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/16/02/08/01/2025 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2025.10. 16

சுற்றறிக்கை இலக்கம்:29/2024(I)

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்

அனைத்து மாகாண கல்வி பணிப்பாளர்கள்

அனைத்து வலயக் கல்வி பணிப்பாளர்கள்

அனைத்து பிரிவேனாதிபதிகள்

அனைத்து அரச பாடசாலைகளின் அதிபர்கள்

அனைத்து அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்

அனைத்து விசேட பாடசாலை அதிபர்கள்

**சுரக்சா மாணவர் காப்பீட்டுத் திட்டம்**

"மாணவர் சுரக்சா காப்பீட்டுத் திட்டம்" என்பதாக கல்வி அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2024.08.02 திகதியிட்ட இலக்கம் 29/2024 தாங்கிய சுற்றறிக்கையின் பின்வரும் பிரிவுகள் திருத்தப்படுகின்றன மற்றும் அதில் உள்ள ஏனைய விடயங்கள் மாறாமல் இருக்கும்.

02. **சுற்றறிக்கையின் பிரிவு 05** - "இந்த காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பெற்றோர் இறப்புப் பயன் உரித்தாவது ஆண்டு வருமானம் ரூ. 180,000/= க்கும் குறைவான வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், 'அஸ்வசும' திட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் மட்டுமே." என்பது பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது. இது அறிவுறுத்தல்களில் ஒவ்வொரு இடத்திலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

> i. **இந்த காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பெற்றோர் இறப்புப் பயன் உரித்தாவது ஆண்டு வருமானம் ரூ. 240,000/= க்கும் குறைவான குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மற்றும் 'அஸ்வசுமா' திட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டுமே.**

03. **சுற்றறிக்கையின் பிரிவு 06** - '01 ஜுலை 2024 தொடக்கம் 30 ஜுன் 2027 வரையிலான 03 ஆண்டுகள் காலம்' என்பது **ஜுலை 01, 2024 முதல் ஆகஸ்ட் 31, 2027 வரையிலான 03 ஆண்டுகள் காலமாக** திருத்தப்படுகின்றது. அதுபோல இந்தக் காலப்பகுதி அறிவுறுத்தல்களில் உள்ள அனைத்து இடங்களிலும் மேலே உள்ளபடி திருத்தப்படுகின்றது.

04. அறிவுறுத்தல்களில், அத்தியாயம் 2 இல், 2.1 சுகாதார காப்பீட்டு நன்மைப்பயன்கள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன.

> i. சுற்றறிக்கை 2.1.1 இன் பிரிவுகள் 2.1.1.4 மற்றும 2.1.1.3, 2.1.1.2, 2.1.1.1 ஆகியவை மாறாமல் உள்ளன என்பதோடு பிரிவு 2.1.1.4 பிரிவுக்கு "b மற்றும் c" ஆக பின்வரும் புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
>
> > b - முதுகெலும்பு திரிபு குறைபாட்டை சரிசெய்ய அணியும் சாதனத்திற்கான (Scoliosis Brace) ஆகும் செலவு
> >
> > c – காது கேட்பு உபகரணத்துக்கான செலவு (தொண்டை, காது, மூக்கு அறுவை சிகிச்சை நிபுணரால் பரிந்துரைக்கப்பட்டது)



ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

ii. சுற்றறிக்கையின் 2.1.2 இல், “a,b, c மற்றும் d” மாறாமல் இருக்கும், என்பதோடு “e மற்றும் f” பின்வருமாறு திருத்தப்படும். என்பதொடு ஒரு புதிய விடயம் “g” சேர்க்கப்பட்டுள்ளது.

e – பார்வை குறைபாட்டை சரிசெய்யும் சாதனம் (visual aids) வாங்குவதற்கான செலவு (இது திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் கிடைக்கும் ஒரு நன்மைப்பயன் என்றாலும், குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கு நேரடி கட்டண முறையின் கீழ் இந்த வசதியைப் பெறலாம் - மூக்கக்கண்ணாடிகளுக்கான அதிகபட்ச செலவு ஆண்டுக்கு ரூ. 10,000/=)

f - விபத்து அல்லது விபத்து அல்லாத எதிர்பாராத நோய் ஏற்பட்டால் சிகிச்சைக்குத் தேவையான Lumber Guards and cervical collars சாதனம் வாங்குவதற்கான செலவு (ஒரு விசேட மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்டவாறு)

g - தீவிர நோய்கள் மற்றும் பின்வரும் நோய்களின் வகையைச் சேர்ந்த நோய்களுக்கான நீண்டகால மருந்துகளைப் பெறுவதற்கான செலவுகள் (இந்த நோய்களுக்கு தகுதிவாய்ந்த MBBS மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் மருந்து பட்டியலுக்கு)

i. Epilepsy
ii. Nephrotic syndrome
iii. Rheumatoid arthritis
iv. Systemic lupus erythematosis
v. Ulcreative colitis
vi. Crohn disease
vii. Rheumatic valvular heart disease

iii. சுற்றறிக்கையின் 2.1.3 பிரிவு 2.1.3.1இல் “n மற்றும் o” பின்வருமாறு திருத்தப்பட்டு, “p” என ஒரு புதிய நோய் சேர்க்கப்பட்டுள்ளது.

n- Thalassemia, hereditary spherocytosis, sickle cell anemia
o - Encephalitis
p - Pneumothorax

05. அறிவுறுத்தல்களில் அத்தியாயம் 3 இன் பிரிவுகள் 3.3 மற்றும் 3.5 பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன.

**i. 3.3 – நன்மைப்பயன் சலுகைகளைப் பெறுவதற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

பயன்களைப் பெறுவதற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. மேற்படி ஆவணங்களை, அதிபர் அல்லது சுரக்சா மாணவர் காப்பீட்டு விடயத்துக்கான அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையொப்பமிட்டு, திகதியிட்டு, உத்தியோகபூர்வ முத்திரை வைத்து உறுதிப்படுத்தி 90 நாட்களுக்குள் (மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து / இறந்த நாளிலிருந்து) ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் கோப்பரேசன் ஜெனரல் லிமிட்டெட் நிறுவனத்தின் எந்தவொரு பிராந்திய அலுவலகத்திலாவது சமர்ப்பிக்கப்பட வேண்டும். (பெற்றோர்/அதிபர்/ பிரிவேனாதிபதியால்)

**ii. 3.5 - ஆவணங்களைச் சமர்ப்பித்தல்**

உரித்துகோருபவர் உரிமைச் சலுகைகளைப் பெறுவதற்கு, அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் பாடசாலையின் அதிபரிடம் சான்றுபடுத்துவதற்காக சமர்ப்பிக்க வேண்டும். அதிபர் மேற்படி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை சரியென தெளிவான முறையில் சான்றளித்து உத்தியோகபூர்வ முத்திரையை பதிக்க வேண்டும்.

சான்றுப்படுத்தப்பட்ட ஆவணங்களை ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோபரேசன் ஜெனரல் லிமிட்டெட் நிறுவனத்தின் எந்தவொரு பிராந்திய அலுவலகத்திலும் சமர்ப்பிப்பதற்காக பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது அதிபர்/பிரிவேனாதிபதி மூலம் நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும். பாடசாலைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்கள் தொடர்பான விபரங்களும் இணைப்பு 06 மூலம் வலயக் கல்வி பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. அறிவுறுத்தல்களின் 4 ஆம் அத்தியாயத்தின் பிரிவுகள் 4.2, 4.3 மற்றும் 4.4 பின்வருமாறு திருத்தப்படும்.

• 4.2 இல், "a, b, c" மாறாமல் இருப்பதொடு மேலும் "d" இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதி மட்டும் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

- 2024.07.01 முதல் 2024.12.31 வரை 2025.03.15 க்கு முன் மற்றும்
- 2025.01.01 முதல் 2025.08.31 வரை 2025.11.30 க்கு முன்

2025/2026 ஆம் ஆண்டிற்கு

- 2025.09.01 முதல் 2026.02.28 வரை 2026.05.15 க்கு முன் மற்றும்
- 2026.03.01 முதல் 2026.08.31 வரை 2026.11.15 க்கு முன்

(மேலே உள்ளவை 2026/2027 ஆம் ஆண்டிற்கும் கொடுக்கப்பட வேண்டும்)

• 4.3 இல், " a, b, c" மாறாமல் இருக்கும் மற்றும் "d" நீக்கப்படும். " e " இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதி மட்டுமே பின்வருமாறு திருத்தப்படுகிறது.

- 2024.07.01 முதல் 2024.12.31 வரை 2025.03.01 க்கு முன் மற்றும்
- 2025.01.01 முதல் 2025.08.31 வரை 2025.11.01 க்கு முன்

2025/2026 ஆம் ஆண்டிற்கு

- 2025.09.01 முதல் 2026.02.28 வரை 2026.05.01 க்கு முன் மற்றும்
- 2026.03.01 முதல் 2026.08.31 வரை 2026.11.01 க்கு முன்

(மேலே உள்ளவை 2026/2027 ஆம் ஆண்டிற்கும் கொடுக்கப்பட வேண்டும்)

• 4.4 இல், " a, b,c,e, g " மாறாமல் இருக்கும், மேலும் " d மற்றும் f " நீக்கப்படும். "h" இல் குறிப்பிடப்பட்டுள்ள காலம் மட்டும் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது:

- 2025.02.01 க்கு முன் 2024.07.01 முதல் 2024.12.31 வரை மற்றும்
- 2025.01.01 முதல் 2025.08.31 வரை 2025.10.01 க்கு முன்

2025/2026 ஆம் ஆண்டுக்கு

- 2025.09.01 முதல் 2026.02.28 வரை 2026.04.01 க்கு முன் மற்றும்
- 2026.03.01 முதல் 2026.08.31 வரை 2026.10.01 க்கு முன்

(மேற்கூறியவை 2026/2027 ஆம் ஆண்டிற்கும் வழங்கப்பட வேண்டும்)

07. அறிவுறுத்தல்களில் 5 ஆம் அத்தியாயத்தில், "b, d, e, மற்றும் f" மாறாமல் இருக்கும், மேலும் "a மற்றும் c" பின்வருமாறு திருத்தப்படும்.

a. சலுகைகளைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களில் அதிபர் அல்லது சுரக்சா மாணவர் காப்பீட்டுத் திட்டத்திற்காக அதிபரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கையொப்பமிட்டு, திகதியிட்டு சான்றளிக்கப்பட வேண்டும், மேலும் 90 நாட்களுக்குள் ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் கோபரேசன் ஜெனரல் லிமிட்டெட் நிறுவனத்தின் எந்தவொரு பிராந்திய அலுவலகத்திலாவது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

c. பயன் கிடைக்க தகுதி பெறுவது உரிமைகோரல் படிவம் மற்றும் ஆவணங்களின் மூலப் பிரதிகள் அல்லது மட்டுமே ஆவணங்கள் கோரப்பட்டபடி சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே.

சுரக்சா மாணவர் காப்பீட்டுத் திட்டத்தை 2025.09.01 முதல் இனிமேல் செயல்படுத்துவதில் மேற்கண்ட திருத்தங்களின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாலக்க களுவெவ

செயலாளர்